# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பிறப்பு, இறப்புப் பதிவு (திருத்தச்) சட்டம்

*(1993, சனவரி மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1993 ஜனவரி மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : ரூபா 1.00

# 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பிறப்பு, இறப்புப் பதிவு (திருத்தச்) சட்டம்

[1993, சனவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

உ.வ.—ஓ. 71/91
4001

பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பிறப்பு, இறப்பு பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (110 ஆம் அத்தியாயமான) பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 110 ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"6. (1) இலங்கையின் நிருவாக மாவட்டங்கள் 5 ஆம் பிரிவின் கீழ் (இதனகத்துப்பின்னர் "பிரிவு" ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படும்) எந்தப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனவோ அல்லது பிரிக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுகின்றனவோ அந்தப் பிரிவு ஒவ்வொன்றுக்கும் பெயர் குறித்தாயினுஞ்சரி, பதவி குறித்தாயினுஞ்சரி —

(அ) ஒரு பதிவாளரும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பதிவாளர்களும் பிரதிப் பதிவாளர்களும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளிலும் அத்துடன் நியமனத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பதில் பதிவாளர் ஒருவரும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரும் அத்துடன் பதில் பிரதிப் பதிவாளர் ஒருவரும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரும்,

நியமிக்கப்படலாம்.".

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.